# வள்ளுவன் தமிழ் மையம்

## செய்தி மடல் - சனவரி 2023



## தலைவர் திருமதி இலட்சுமி வேல்ராஜின் செய்திமடல் வெளியீட்டுச் செய்தி

அனைவருக்கும் இனிய தமிழர் திருநாள் நல்வாழ்த்துகள். இந்நன்னாளில் வள்ளுவன் தமிழ் மையத்தில் புதிய முயற்சியாக முதன்முதலாக ஒரு காலாண்டு செய்திமடலை வெளியிடுவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம். இம்மடல் ஆசிரியர் குழு முன்னெடுத்து நம் பள்ளி பெற்றோர்கள் மற்றும் மாணவர்களால் ஒருங்கிணைக்கப்படுகிறது. புலம்பெயர்ந்து வாழும் நாம் குழந்தைகளுக்குத் தமிழ் கற்றுக்கொடுப்பதோடு மட்டுமல்லாமல் அவர்களின் தலைமைப்பண்பு மற்றும் குழுவாகப் பணிசெய்யும் திறன் ஆகியவற்றை வளர்க்கவும் பல்வேறு திட்டங்களை உருவாக்கி செயல்படுத்தி வருகிறோம். இந்த ஆண்டு மீண்டும் நேரில் பள்ளி தொடங்கியதும், தமிழ்த்தேனீ குழு, குறள்தேனீ குழு, இலக்கிய முற்றம் போன்ற பல முன்னெடுப்புகள் எடுக்கப்பட்டுள்ளன. இவை போன்ற பள்ளியின் முன்னெடுப்புகளில் பெற்றோரும் குழந்தைகளும் பெருவாரியாக பங்களித்து அதன் மூலம் பயன் பெற வேண்டுகிறோம். இது நம் பள்ளி, நாம் அனைவரும் ஒன்றிணைந்து இதன் கட்டமைப்பை மென்மேலும் வலுப்படுத்துவோம். நன்றி!

இதன் காணொளியைப் பார்க்க

---

## வள்ளுவன் தமிழ் பள்ளியின் நிறுவனர்களில் ஒருவரான திரு. பாஸ்கர் குமரேசன் அவர்களுடன் ஒரு நேர்காணல்



**கேள்வி:** உங்களைப் பற்றி சொல்லுங்கள்.
**பதில்:** என் பெயர் பாஸ்கர் குமரேசன்; நாமக்கல்லில் பிறந்தேன்; மதுரையில் கல்லூரிப்படிப்பை முடித்து விட்டு 1998-ல் அமெரிக்காவிற்கு வந்தேன். தற்போது சேன்டிலியில் என் மனைவி, பிள்ளைகளோடு வசிக்கிறேன்.

**கேள்வி:** ஏன் நீங்கள் வள்ளுவன் தமிழ் மையத்தை ஆரம்பித்தீர்கள்?
**பதில்:** வள்ளுவன் தமிழ் மையம் 2010 இல் பல தன்னார்வலர்களால் 17 மாணாக்கருடன் தொடங்கப்பட்டது. அடுத்த தலைமுறை தமிழ் கற்றுக்கொள்ள வாய்ப்பு இருக்கவேண்டுமென்று ஆரம்பித்தோம்.

**கேள்வி:** வேலை, தமிழ்ப்பள்ளி, மற்றும் குடும்பத்தை எப்படி சமநிலைப் படுத்துகிறீர்கள்?
**பதில்:** தன்னார்வப்பணியில் விருப்பமும், பள்ளி வேலைக்கென்று குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்குவதன் மூலமும் நம் நேரத்தை நம்மால் சமநிலைப்படுத்த முடியும்.

இதன் காணொளியைப் பார்க்க:

**கேள்வி:** நீங்கள் தொடங்கிய போது என்ன இலக்கு வைத்து இருந்தீர்கள்?
**பதில்:** ஒரு பள்ளியுடன் நின்று விடாமல் தமிழ் சார்ந்த பல முன்னெடுப்புகளை எடுப்பதே இலக்காக இருந்தது.

**கேள்வி:** வள்ளுவன் தமிழ் மையத்தின் வளர்ச்சி பற்றி என்ன நினைக்கிறீர்கள்?
**பதில்:** பள்ளி 10 ஆண்டுகளில் வளர்ச்சியின் உச்சத்தைத் தொட்டது. இதைத் தக்க வைக்க தன்னலமற்ற தொண்டும், உறுப்பினர்களிடையே நல்ல உறவும் இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.

இன்னும் பல வினாக்களுக்குப் பொறுமையாகவும் விரிவாகவும் விடையளித்து இந்த நேர்காணலைச் சிறப்பாக நடத்திக்கொடுத்த திரு. பாஸ்கர் குமரேசனுக்குச் செய்தி மடல் குழுவின் சார்பில் மனமார்ந்த நன்றிகள்.
- தொகுத்து வழங்கியவர்கள் செல்வி அவந்திகா அருள் மற்றும் செல்வி டயான் விஜய் (நிலை - 7 அல்லி மாணவிகள்)

---

## தெரிந்து கொள்வோம்

- புறநானூற்று பாடல்கள் 150-க்கும் மேற்பட்ட புலவர்களால் எழுதப்பட்டவை. இந்நூலில் அதிகப் பாடல்களை பாடியவர் ஔவையார் (33 பாடல்கள்) ஆவார்.- திருமதி மாலினி கல்யாணி மெட்ராஸ், நிலை 4 முல்லை ஆசிரியை

- மனிதனுக்கு மனிதன் மட்டும் உதவுவது ஈகை அல்ல. படர்ந்து செல்லும் செடி கொடிகளுக்கும் கூட உற்றுழி உதவி செய்து தமிழ்ப்பண்பாட்டை உலக அரங்கில் உயர்ந்த இடத்துக்கு எடுத்துச்சென்றது தமிழினம். ஆமாம்….. குளிரில் நடுங்கிய மயிலுக்கு போர்வை அளித்துச் சென்றான் பேகன். பற்றிப்படர கொம்பில்லாமல் கிடந்த கொடிகளுக்கு தான் வந்த தேரினை விட்டுச் சென்றவன் பாரி. - திருமதி விஜயலக்ஷ்மி ராமநாதன், முதன்மை வ.த.மை செய்தி மடல் ஆசிரியர்

- குறிஞ்சிச் செடி அல்லது நீலக்குறிஞ்சி என்பது இந்தியாவின் மேற்குத் தொடர்ச்சி மலையில் பரவலாக வளரும் ஒரு செடியாகும். இதில் பூத்துக் குலுங்கும் நீல மலர்களினால் இம்மலைப் பிரதேசம் நீல நிறத்தில் தோன்றுவதால், தென்னிந்தியாவில் இம்மலைத் தொடர்ச்சிக்கு நீலகிரி மலை என்ற பெயர் வந்தது. இந்த மலர் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறையே பூக்கும்! - திருமதி அல்பினா பன்னீர்செல்வம், நிலை 3 அல்லி ஆசிரியை

# வள்ளுவன் தமிழ் மையம்

## செய்தி மடல் - சனவரி 2023


### மாணவர்களின் படைப்புகள்















பொங்கல் பண்டிகை

முன்னுரை:-
பொங்கல் பண்டிகை தமிழர் கலாச்சாரத்தை உலகுக்கு உணர்த்தும் திருவிழா ஆகும்.

பொங்கல் பண்டிகை:-
வேளாண்மையை அடிப்படையாக கொண்ட தமிழர் தம் இறைவனான சூரியனுக்கு நன்றி சொல்ல நடத்தப்படும் பண்டிகையாகும். போகி பொங்கல், தைப் பொங்கல், மாட்டு பொங்கல், காணும் பொங்கல் என நான்கு நாட்கள் பொங்கல் கொண்டாடப்படுகிறது.

போகி பொங்கல்:-
பழையன கழிந்து புதியன புகுதலே போகி. இது மார்கழி கடைசி தினத்தன்று கொண்டாடப்படும். போகி பண்டிகை அன்று வீடுகளை சுத்தம் செய்து தேவையற்ற பழைய பொருட்களை தீயில் இட்டு கொளுத்துவர்.

தைப் பொங்கல்:-
தை மாதத்தின் முதல் நாள் தை பொங்கல் கொண்டாடப் படுகிறது. அதிகாலையில் எழுந்து குளித்து புத்தாடை அணிவர். வாசலில் கோலமிடுவர். புது அடுப்பில் இஞ்சியும் மஞ்சளும் கட்டிய புதுப்பானை வைத்து புத்தரிசி இடுவர். பொங்கல் பொங்கி வரும் போது "பொங்கலோ பொங்கல்" என கூறி மகிழ்வர். பின்னர் தலைவாழை இலையில் பொங்கலிட்டு சூரியனை வழிபடுவர். பின்பு உறவினர் அனைவரும் ஒன்றாக அமர்ந்து பொங்கலை உண்பர்.




மாட்டு பொங்கல்:-
உழவுத்தொழிலுக்கு உழைத்த மாடுகளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் கொண்டாடப் படுகிறது. மாட்டுப்பொங்கல் அன்று மாடுகளைக் குளிப்பாட்டி குங்குமம் மஞ்சளிடுவர். பின்னர் மாடுகளுக்கு பொங்கலிட்டு மகிழ்வர். அன்றைய தினம் வீர விளையாட்டான ஜல்லிக்கட்டு நடைபெறும்.

காணும் பொங்கல்:-
காணும் பொங்கல் அன்று பிரிந்த நண்பர்கள், உறவினர்களை சந்திக்கும் நாளாகும். பல்வேறு விளையாட்டுப் போட்டிகள், பட்டிமன்றம் நடைபெறும்.

முடிவுரை:-
இவ்வாறு பொங்கல் பண்டிகை நான்கு நாட்களும் கோலாகலமாக கொண்டாடப்படுகிறது. இதனால் பொங்கல் பண்டிகை தமிழர்களின் சிறப்பான பண்டிகையாக உள்ளது.

ஸ்ரீநிகா பிரிட்டோ
நிலை 5 அல்லி



தமிழ் விடுகதைகள்

1. என்னை கீழே போட்டால் நான் உடைவேன். என்னை பார்த்து சிரித்தால் நான் சிரிப்பேன். நான் யார்?
2. மலைகள் இருக்கு கற்கள் இல்லை. ஆறுகள் இருக்கு ஆனால் நீர் இல்லை. நான் யார்?
3. ஒரே வயிற்றில் பிறந்தாலும் ஒருவன் ஓடுவான், ஒருவன் நடப்பான். நான் யார்
4. அனைவரையும் நடுங்க வைப்பான். ஆதவனுக்கே அடங்கிடுவான். நான் யார்?
5. தண்ணால் பார்க்கலாம் ஆனால் கையால் பிடிக்கமுடியாது. நான் யார்?

ஆரவ் சஜய்
நிலை 3 அல்லி

## வருகிற நிகழ்வுகள்

- கட்டுரை: 02/25/2023, 12:00-1:30pm
- இசை: 02/25/2023, 1:00-7:00pm
- விளம்பர வேளை: 03/04/2023
- ஆத்திசூடி: 03/25/2023
- திருக்குறள் தேனீ: 03/25/2023
- தமிழ்த்தேனீ: 04/15/2023

## தமிழ் ஆசிரியர் திருமதி தனலட்சுமி மாரிமுத்து அவர்களுடன் ஒரு நேர்காணல்



கேள்வி: உங்களைப்பற்றிச் சொல்லுங்கள்?
பதில்: வணக்கம். நான் ஒரு தமிழ் ஆசிரியர். வள்ளுவன் தமிழ் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றுகிறேன். உங்கள் அனைவருக்கும் தமிழ் கற்றுக் கொடுப்பதில் எனக்கு மிக்க மகிழ்ச்சி. அமெரிக்காவில் வந்து தமிழை வளர்த்து உங்களை எல்லாம் நல்ல முறையில் வழி நடத்த வேண்டும் என்பதில் நான் பேராவல் அடைகிறேன்.

கேள்வி: நீங்கள் எத்தனை வருடங்களாக வள்ளுவன் தமிழ்ப் பள்ளியில் ஆசிரியராக இருக்கிறீர்கள்?
பதில்: கடந்த ஒன்பது ஆண்டுகளாக தமிழ் ஆசிரியராக பணியாற்றுகிறேன். 2013 செப்டம்பர் மாதத்தில் நான் எனது பணியை தொடங்கினேன். நான் இப்பொழுது பத்தாவது ஆண்டில் காலடி எடுத்து வைத்திருக்கிறேன்..

கேள்வி: மாணவர்கள் கவனமாகக் கற்க நீங்கள் கையாளும் யுக்தி என்ன?
பதில்: நான் என்னுடைய அன்பை மாணவர்களுக்குக் கொடுக்கிறேன். அன்பாக நாம் என்ன சொன்னாலும் அதை மாணவர்கள் கேட்டுக்கொள்வார்கள். அன்பு ஒன்று மட்டும்தான் கொடுக்கக் கொடுக்க குறையாதது. வளரக்கூடியது.

கேள்வி: நீங்கள் தமிழை எவ்வாறு கற்பிப்பீர்கள்?
பதில்: நான் மாணவர்களுக்கு அன்பான முறையில் கற்றுக் கொடுப்பேன். அ முதல் ஃ வரை, க, ங, ச..., க், ங், ச்....போன்ற தமிழ் எழுத்துகளை முழுமையாகவும், உச்சரிப்புடன், தெளிவுடனும், அவர்களுக்கு முதல் வாரத்திலேயே நன்றாக கற்றுக் கொடுப்பேன். அதை கரும்பலகையில் எழுதி அவர்களுக்கு புரியும்படி கற்றுக் கொடுப்பேன். அவர்களை ஐந்து முறை எழுத வைத்து மனதில் பதியும்படி செய்வேன்.

கேள்வி: மாணவர்களுக்கு என்ன செய்தி கூற விரும்புகிறீர்கள்?
பதில்: நான் எனது மாணவர்களுக்கு மட்டுமல்லாமல் வள்ளுவன் தமிழ் மையத்தில் படிக்கும் அனைத்து மாணவர்களுக்கும் வைக்கும் அன்பான வேண்டுகோள் என்னவென்றால், நீங்கள் படித்த தமிழை மறக்காமல் இருக்க வேண்டும். திருக்குறளை கற்று அதன் கருத்துகளை அறிந்து கொண்டாலே போதும் நம் வாழ்வில் உயர்ந்த நிலையை அடையலாம். வாழ்க தமிழ்! வளர்க தமிழ்!! - தொகுத்து வழங்கியவர்: செல்வி சஞ்சனா வாஞ்சிநாதன் (மேல்நிலை-வாகை மாணவி)

இதன் காணொளியைப் பார்க்க:

## பெற்றோர்களுடன் ஒரு நேர்காணல்

திருமதி பிரித்தி ஜெயப்பிரகாஷ்: என் மகன் கடந்த ஒரு வருடமாக இந்தத் தமிழ்ப் பள்ளியில் படிக்கிறான். நாங்கள் எப்போதும் வீட்டில் தமிழில்தான் பேசுவோம். ஆனாலும் அவனுக்குத் தமிழ் மீது பற்று வரவில்லை. இங்கே வந்த பிறகு நிறைய விடயங்கள் கற்றுக் கொள்கிறான். நம் மொழி, அதன் கலாச்சாரம், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் உறவுமுறைகளைப் பற்றி கற்றுக் கொள்கிறான். இந்தப் பள்ளியில் நிறைய ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் இருக்கிறார்கள். அவர்கள் தமிழை நல்ல முறையில் கற்றுக் கொடுக்கிறார்கள்.


திருமதி மஞ்சுளா: என் குழந்தைகள் இந்தப் பள்ளியில்தான் தமிழ் படித்துக் கொண்டிருக்கிறார்கள். எனது மகன் இளமழலையிலிருந்து நிலை 4 வரை இங்குதான் தமிழ் படித்துக்கொண்டிருக்கிறான். என்னுடைய இரண்டு சிறிய குழந்தைகளும் இளம் மழலையில் படிக்கிறார்கள். எனது பெரிய பையன் தமிழ்ப் பள்ளிக்கு வருவதற்கு முன்னால் வரை ஆங்கிலத்தில் தான் அதிகமாகப் பேசுவான். இந்தப் பள்ளிக்கு வந்த பிறகு அவனுக்குத் தமிழின் மீது அதிகமான ஆர்வம் வந்திருக்கிறது. இப்பொழுது தமிழில் நன்றாகப் பேசுகிறான். இப்பொழுது அவனுக்குத் தமிழ் மிகவும் பிடித்த மொழியாக மாறிவிட்டது. அதுமட்டுமில்லாமல் இந்தியாவின் மீதும் அவனுக்கு அதிகப் பற்றும், அன்பும் வந்திருக்கிறது.


திரு. இரவிசங்கர்: எனது 2 குழந்தைகளும் இந்த தமிழ்ப் பள்ளியில்தான் படிக்கிறார்கள். எனது மூத்த மகன் 5ம் நிலையும், இளைய மகன் மழலையும் படிக்கின்றனர். தமிழ்ப் பள்ளி எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது, ஏனென்றால் நாங்கள் சில காலம் இந்தியாவுக்குத் திரும்பிச் சென்றிருந்தோம், அங்கு அவர்கள் எனது மூத்த மகனைத் தமிழில் சோதித்தனர். இங்குப் படித்ததால் அவரால் நன்றாகப் பதில் சொல்ல முடிந்தது. நமது தமிழ் மொழியுடன் தொடர்பில் இருப்பது மிகவும் அவசியம் என்று நான் நினைக்கிறேன்.

திருமதி பிரியா: என் மகன் வள்ளுவன் தமிழ்ப்பள்ளியில் ஐந்து வருடங்களாகப் படிக்கிறான். அவன் நிலை இடைநிலையில் படிக்கிறான். நானும் என் கணவரும் இங்கே தன்னார்வத் தொண்டு செய்கிறோம். தமிழ்ப்பள்ளி நிச்சயமாக எங்களுக்கு நன்றாகவே இருந்திருக்கிறது. எனது மகனுக்கு இரண்டு வயதாக இருக்கும் போது நாங்கள் இங்கு வந்தோம், அவருக்கு உண்மையில் தமிழ் தெரியாது. ஆங்கிலத்தில் மட்டுமே பேசிக் கொண்டிருந்த அவருக்கு இப்போது தமிழ் நன்றாகப் பேசவும், படிக்கவும், எழுதவும் தெரியும். எப்பொழுதும் தாத்தா பாட்டியிடம் தமிழில் பேசுவார். தமிழ்ப்பள்ளியை மிகவும் ரசிக்கிறார்.

இதன் காணொளியைப் பார்க்க:

## மாணவர்களின் படைப்புகள்




இடைநிலை-தும்பை மாணவர்கள்

- முன்னேற்றம்
- ஏறுதழுவுதல்
- பற்றாக்குறை
- பொருளாதாரம்
- ஒருமைப்பாடு
- கரியமிலவாயு
- தொழில்நுட்பம்
- அகழ்வாராய்ச்சி
- ஏகாதிபத்தியம்
- மக்கள்தொகை

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஒ | ஏ | ர | பொ | ஏ | று | த | ழு | வு | த | ல் |
| ரு | கா | ரு | ற | அ | ப | ய | ற | கு | ரி | க |
| மை | தி | ழ | த | க | ஞ | ஐ | ச | தா | ஒ | ப |
| ப் | ப | ம் | ண | ழ் | மு | த | ச | ம் | ஒ | ம் |
| பா | த் | ச | இ | வா | மு | ன் | னே | ற் | ற | ம் |
| டு | தி | ல | தொ | ரா | ற் | ளா | ஒ | ள் | தா | கு |
| ப | ய | ரி | ம் | ய் | பொ | ரு | ளா | தா | ர | ம் |
| ஏ | ம் | ற | ளா | ச் | ம | க் | க | ள் | தொ | கை |
| ப | ள | க | பொ | சி | ப | ற் | றா | க் | கு | றை |
| க | ரி | ய | மி | ல | வா | யு | க | தொ | தி | ரு |
| ழ | தொ | ழி | ல் | நு | ட் | ப | ம் | ன | பொ | மி |




### இணையவழிக் கல்வி

நம் வளர்ச்சிக்கு கல்வி மிகவும் அவசியமான ஒன்று. கல்வி முறையில் பல மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டே உள்ளது. தற்போது இணையவழிக் கல்வி மிகவும் புகழ் பெற்று வருகிறது. இணையவழிக்கல்வி மாணவர்களுக்கு தகுந்த நேரத்தில் தகுந்தவாறு அமைத்துக் கொள்ள முடிகிறது. ஒவ்வொரு பள்ளியும் ஒவ்வொரு விதமாக கல்வியை நடத்தி வருகின்றனர். காணொளிப் பதிவின் மூலமும், புதிய செயலிகள் மூலமும், கல்வி கற்பித்தல் நடைபெறுகிறது. பாடங்களை பதிவிறக்கம் செய்து கொண்டு, மீண்டும் மீண்டும் தேவையான நேரங்களில் படித்துக் கொள்ளலாம். இக்கல்வி மூலம் எங்கிருந்து வேண்டுமானாலும் கல்வி கற்றுக் கொள்ள முடியும்.

இந்தக் கல்வி முறைக்கு கணினி , மடிக்கணினி அல்லது கைத்தொலைபேசி அதனுடன் இணையதள இணைப்பு மிகவும் அவசியம். இதன் மூலம் நேரடி வகுப்புகள் போல இணையவழி வகுப்புகள் நடைபெறும். இதில் மாணவர்கள், ஆசிரியரிடம் சந்தேகங்களை காணொளி மூலமாகவும், உரை செய்தி (text message) மற்றும் மின்னஞ்சல் (email) வழியாகவும் கேட்கலாம். வீட்டுப் பாடங்களை கூகிள் வகுப்பறையில் (google classroom) பதிவு செய்யலாம். இணைய வழியில் தேர்வுகளும் எழுதலாம். இது போல இணைய வழிக் கல்வி முறையில் பல நன்மைகள் உள்ளன.

கல்வி நம் அறிவுத் திறனை வளர்க்கும். அக்கல்வி பாடப் புத்தகத்தின் மூலம் மட்டுமே கிடைத்து விடாது. நாம் நம் அறிவை விருத்தி செய்ய பல முயற்சிகள் செய்ய வேண்டும். உலக வளர்ச்சிக்கு ஏற்ப நாம் இணையவழிக் கல்வியின் நன்மைகளை பயன்படுத்தி கொள்ள வேண்டும்.

- ரோஷினி செல்வம் - நிலை 6 - அல்லி

## இலக்கியத் தலைவர்கள் - தொடர் 1

யார் தெரியுமா? சிலப்பதிகாரத்தில் நன்கு ஆராயாது தீர்ப்பு வழங்கி கோவலனைக் கொல்ல ஆணையிட்ட குற்றத்தால், தன் உயிரையே மாய்த்துக் கொண்ட பாண்டிய மன்னன் யார் தெரியுமா? அவன்தான் வடநாட்டு மன்னர்களை வென்று ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்ற பட்டப்பெயர் கொண்ட பாண்டியன் நெடுஞ்செழியன் ஆவான்.

அறத்திலும் வீரத்திலும் சிறந்து விளங்கிய பாண்டியன் நெடுஞ்செழியன், சிறந்த தமிழ்ப் புலமையும் பெற்றவன். புறநானூற்றில் 183-வது பாடல் இவன் இயற்றியதே. "உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும், பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே" என்று தொடங்கும் இப்பாடலில் கல்வியின் சிறப்பை எடுத்துக் கூறுகிறான். எப்பாடு பட்டாவது அனைவரும் கல்வி கற்க வேண்டும்; கற்ற குழந்தையையே தாயும் விரும்புவாள்; கற்றவர்கள் காட்டும் வழியில்தான் அரசும் செல்லும்; கற்ற கல்வியால் மட்டுமே ஒருவன் தலைவன் ஆகிறான், பிறப்பால் அல்ல என்றெல்லாம் பலவாறு கல்வியின் சிறப்பைப் பறை சாற்றுகிறான்.

தன் குடிமக்கள் அனைவரும் கல்வியில் சிறந்திருக்க வேண்டும் என்ற நோக்கில் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னரே மன்னனொருவன் பாடல் இயற்றியிருப்பது உலகில் நாம் வேறெங்கும் கேட்டறியாதது. நம் முன்னோர் சொல்லியபடி கல்வியின் சிறப்பை உணர்வோம்! வாழும் நாளெல்லாம் தொடர்ந்து கற்போம்!! வாழ்வில் உயர்வோம்!!! - திரு. பா. வேல்ராஜ் நிலை 7 முல்லை ஆசிரியர்.